Tamil

# பட்டாணிக்கடலை மீது இளவரசி

- டென்மார்க்கின் கதை





முன்னொரு காலத்தில் ஒரு இளவரசன் இருந்தான். அவன் சிறப்பு வாய்ந்த இளவரசியைத் திருமணம் செய்ய விரும்பினான். அதனால் உலகம் முழுவதும் சென்று இளவரசியைத் தேடினான். ஆனால் அவன் பார்த்த இளவரசிகளிடம் ஏதோ ஒரு குறை இருந்தது.



இளவரசிகள் பலர் இருந்தனர். ஆனால் அவர்களில் மிகச்சிறப்பான இளவரசியை அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. அதனால் அவன் வீட்டிற்கு திரும்பி வந்து மிகவும் கவலையுடன் இருந்தான்.



ஒரு நாள் இடி மின்னலுடன் கடும் மழை பெய்தது. அப்போது வாயில் கதவை யாரோ தட்டிய சத்தம் கேட்டது. வயதான இராசா சென்று கதவைத் திறந்தார். வெளியே ஒரு இளவரசி நின்று கொண்டிருந்தாள்.



அவள் மழையில் நனைந்து  ஈரமாகவும் அழுக்காகவும் இருந்தாள்.  அவளது உடைகளிலிருந்து தண்ணீர் வழிந்து  காலணிகளால் ஓடியது.



"ஆம், இவள் மிகவும் சிறப்பு வாய்ந்த இளவரசியா எனக் கண்டு பிடிக்க வேண்டும் !" என வயதான இராணி நினைத்தார். இராணி எதுவும் கூறாமல் படுக்கை அறைக்குள் சென்றாள். படுக்கையின் கீழ் ஒரு பட்டாணியை வைத்தாள். அவள் பட்டாணிக்கு மேல் இருபது மெத்தைகளையும் இருபது விரிப்புக்களையும் அடுக்கினாள். அந்தப் படுக்கையில் அன்றிரவு இளவரசியை உறங்க வைத்தனர்.


ZZZzz



காலையில் எழுந்த இளவரசியிடம், எவ்வாறு உறங்கினீர்கள் என்று இராஜாவும் இராணியும் கேட்டார்கள். " ஓ, உண்மையில் மிகவும் கஸ்டமாக இருந்தது ! நான் இரவு முழுவதும் தூங்கவேயில்லை! என்றார் இளவரசி. ஏதோ படுக்கையில் இருப்பது போல் உணர்ந்தேன். நான் கடினமான ஏதோ ஒன்றில் படுத்துக் கொண்டேன். அதனால் என் உடல் முழுவதும் மஞ்சள், நீல நிறத்தில் இருக்கிறது! “எனக்கு மிகவும் கஸ்டமாக இருந்தது” என்றார். இருபது மெத்தைகள், இருபது விரிப்புகள் பட்டாணிக் கடலைக்கு மேல் இருந்தும் அதனைக் கண்டு பிடித்து விட்டார். அதனால் அவள் ஒரு மிகவும் சிறப்பான இளவரசி என உறுதிப் படுத்தினார்கள்.




மிகவும் சிறப்பு வாய்ந்த  இளவரசியால் மட்டுமே இவ்வாறு மிகவும்  கூர்மையான உணர்திறன் இருக்க முடியும். இளவரசன் அவளை தனது மனைவியாக்கிக் கொண்டான். இப்போது அவனுக்கு மிகவும் சிறப்பான  இளவரசி கிடைத்து விட்டாள்.



அந்தப் பட்டாணிக்கடலை காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது . அதனை யாரும் எடுக்கவில்லை என்றால் இப்போதும் பார்க்க முடியும். கதையும் முடிந்தது பகலும் வந்தது.

**NAFO**
Nasjonalt senter for flerkulturell opplæring







Finn flere fortellinger på [morsmal.oslomet.no](https://morsmal.oslomet.no)

Fortellingen er laget med figurer og tegninger fra Aursmoen barnehage